**செ. கு. எண்**: 286 **நாள்**:16.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 16.8.2012

15.8.2012 அன்று ராமநாதபுரம் மாவட்டம், தோப்புவலசையைச் சேர்ந்த மீனவர்கள் துபாய் நாட்டில் அபுதாபி என்ற இடத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, கடல் அலையின் சீற்றத்தால் இரு படகுகள் மோதிக் கொண்டதில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. முனியாண்டி என்பவரின் மகன் திரு. எம். முருகேசன் என்ற மீனவர் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மீனவர் திரு. முருகேசன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இறந்த திரு.முருகேசன் உடலை தமிழகம் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் காலமான முருகேசன் அவர்களின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**